மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி மாண்புமிகு உறுப்பினர் கோபிநாத் அவர்கள் நினைத்ததால் அதை ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியாகிவிட்டது. உறுப்பினர் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கே. கோபிநாத்: *(தெலுங்கில் உரையைத் தொடர்ந்தார்.)*

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

5. ஒழுங்குப் பிரச்சினை

உறுப்பினர் தெலுங்கில் பேச அனுமதிக்கப்படுதல்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நேரமாகி விட்டது.

திரு. சி. ஞானசேகரன்: Point of order. வேறொன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையிலே பொதுவாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டும்தான் எழுதக்கூடிய Reporters இருக்கிறார்கள். தெலுங்கிலே யாராவது பேசினால், அதை எழுதக்கூடிய Reporters இந்த அவையிலே இல்லை. தொடர்ந்து அதுபோன்ற முறையும் இல்லை. இங்கே Press Gallery-யிலே உட்கார்ந்திருக்கக்கூடிய நம்முடைய நண்பர்களுக்கும் தெலுங்கு தெரியுமா என்பதும் தெரியவில்லை. இவ்வளவு அருமையான கருத்துகளை தன்னுடைய சுந்தரத் தெலுங்கிலே அவர் எடுத்து வைத்திருந்தாலும்கூட, அது எப்படி நம்முடைய அவையினுடைய குறிப்பேட்டிலே ஏறுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர் முதலிலேயே ஒரு Script-ஐக் கொடுத்திருக்கிறார். அதை நாங்கள் அங்கே கொடுத்துவிடுவோம்.

2001 செப்டம்பர் 5]

திரு. சி. ஞானசேகரன்: இது அவையில் இல்லாத ஒரு மரபு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருக்கிறது. விதியிலே இருக்கிறது. எந்த மொழியிலும் பேசலாம் என்று விதி 86-லே இருக்கிறது. படித்துக் காட்டட்டுமா?

திரு. சி. ஞானசேகரன்: வாசித்துக் காட்டுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நான் மாண்புமிகு பேரவைக்கு வாசித்துக் காட்டுகிறேன். அவையினுடைய 86 ஆம் விதி.

"பேரவையின் அலுவல் தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருமொழிகளிலுமோ நடைபெறலாம். மேலும் ஓர் உறுப்பினர் மாநில அரசினால் ஏற்பளிக்கப்பெற்ற எம்மொழியிலாவது அல்லது இந்தியிலாவது உரை ஆற்றலாம். மேலும், மேற்கூறிய மொழிகள் எதிலும் தமது கருத்தைத் தெளிவுற எடுத்துரைக்க முடியாத உறுப்பினர் தமது தாய்மொழியில் பேரவையில் உரையாற்றுவதற்குப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்." (மேசையைத் தட்டும் ஒலி) விதி தெளிவாக இருக்கிறது.

4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றங்களுடைய பொதுவான மானியக் கோரிக்கைகளிலே மிக முக்கியமான பிரச்சினை என்பது குடிநீர்ப் பிரச்சினையாகும். மாநிலம் பூராவிலும், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குக் குடிநீரைக் கொண்டு வந்து விடுவோம்; அதை நிறைவேற்றிவிடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலே அந்தக் கருத்து இன்னும் நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. எனவேதான், இந்த மாநில அரசு ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தருவதற்கு உரிய நடவடிக்கையை இந்தக் காலகட்டத்திலே எடுத்தாக வேண்டும். அதனுடைய முயற்சி என்ற முறையிலேதான் சென்னை மாநகராட்சிக்கு குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரித்து வரவேற்கிறேன்.